செ.வெ.எண்: 36 நாள்:15.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10,31,142 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.2000/-மும், 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பும் ரூ.206.22 கோடி மதிப்பில் வழங்கப்படுகின்றது. மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தகவல்.**

---

கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி, நாதேகவுண்டன்புதூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, ஆனைமலை ஆகிய பகுதிகளில் இன்று(15.06.2021) அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.2000/- மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.சண்முகசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜகோபால் சுன்கரா இ.ஆ.ப., மத்திய கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் திருமதி.ஆர்.இந்துமதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மேலாளர் திரு.பிரசன்னாஇராமசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.பழனிச்சாமி, கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் திரு.அர்த்தநாரிஸ்வரர், வருவாய் கோட்டாட்சியர் திரு.செந்திலரசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,** தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக கொரோனா தொற்றால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவும் வகையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் நிவாரண நிதியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று ரூ.4,000 வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்கள்.

அதன்படி **சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்** என்ற வாக்கிற்கிணங்க, வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.05.2021 அன்று பதவியேற்றவுடன் கொரோனா நிவாரண நிதி வழங்கும் ஆணையில் முதல் கையொப்பமிட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, கொரோனா நோய் தொற்றின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், தமிழகத்தில் உள்ள 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4196.38 கோடி செலவில், மே மாதத்தில் கொரோனா நிவாரணத் தொகைக்கான முதல் தவணை ரூ.2000 வழங்கும் திட்டத்தை 10.5.2021 அன்று தலைமைச் செயலகத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் தலா ரூ.2000 வீதம் 10,09,833 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.201.96 கோடி ரூபாய் கொரோனா நிவாரண உதவித்தொகை முதல் தவணை வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது, ஜூன் மாதத்தில் ரூ.4196.38 கோடி செலவில் 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத்தொகைக்கான **இரண்டாவது தவணை** தலா ரூ.2000 ரொக்கத்துடன், 14வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் வழங்கும் பணியினை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்** பிறந்த நாளான கடந்த 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

அதனடிப்படையில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.844.51 கோடி செலவில், 1 கிலோ கோதுமை மாவு, 1 கிலோ உப்பு, 1 கிலோ ரவை,1/2 கிலோ சர்க்கரை, 1/2 கிலோ உளுத்தம் பருப்பு, 1/4 கிலோ கிராம் புளி, 1/4 கிலோ கடலை பருப்பு, 100 கிராம் கடுகு, 100 கிராம் சீரகம், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் மிளகாய் தூள், 200 கிராம் டீ தூள்,

குளியல் சோப்பு மற்றும் துணி சோப்பு 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புடன், ரொக்கமாக ரூ.2000/-ம் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, ரூ.206.22 கோடி மதிப்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10,31,142 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு நிதியுதவியாக தலா ரூ.2000மும், 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பும் வழங்கப்படுகின்றது.

இதற்கென கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் **கூட்டுறவுத் துறையின் கீழ் 1226 நியாயவிலைக்கடைகளிலுள்ள 8,95,060 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குட்பட்ட 54 நியாயவிலைக் கடைகளிலுள்ள 51,400 அரிசிகுடும்ப அட்டைதாரர்களுக்கும், மகளிர் சுய உதவிக்குழுக்களால் நடத்தப்படும் 103 நியாயவிலை கடைகளிலுள்ள 70,211 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட 18 நியாயவிலைக்கடைகளிலுள்ள 14,471 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், என மொத்தம் 1401 நியாய விலைக்கடைகளைச் சேர்ந்த 10,31,142 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றிலிருந்து (15.06.2021) ரூ.2000 ரொக்கமும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பும்** வழங்கப்படுகின்றது.

இத்தொகை நியாயவிலைக் கடைகள் மூலமாக கூட்ட நெரிசலின்றி வினியோகிக்க சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாடாக கடந்த 10.6.2021 முதல் 14.6.2021 வரை 4 நாட்கள் வீடுதோறும் நியாயவிலைக்கடை பணியாளர்கள் மூலம் தினசரி தலா 200 நபர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிடும் வகையில் டோக்கன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும்,டோக்கன்களில், குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் காலை 9.00மணிமுதல் மதியம் 12.30மணிவரை மற்றும் பிற்பகல் 2.00மணிமுதல் 5.00 மணி வரையும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப்

பின்பற்றி நிவாரணத் தொகையை பெற்றுக்கொள்ள அனைத்து விதமான முன்னேற்பாட்டுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து தரப்பு மக்களுக்கும் நிவாரணத் தொகை விரைந்து வழங்கிட வேண்டும் என்ற நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நியாய விலைக்கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த திட்டம் குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையாக சென்றடைவதைக் கண்காணிக்க வட்ட அளவில் துணை ஆட்சியர் நிலை அலுவலர்களை கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளனர்.கொரோனா நிவாரண நிதி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விரைந்து வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் மட்டும் இரண்டு முறை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்து ஆய்வு கூட்டங்களை நடத்தியும், பல்வேறு கட்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டதுடன், இ.எஸ்.ஐ மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் முழு பாதுகாப்பு கவச உடை அணிந்து, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு நேரில் சென்று நோயாளிகளை சந்தித்து, நலம் விசாரித்து, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் போர்கால அடிப்படையிலான இதுபோன்ற நடவடிக்கைகளினால், தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவல் படிப்படியாக குறைந்து வருகிறது.

கொரோனா நிவாரண நிதியை பெற வரும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து உரிய சமூக இடைவெளியினை பின்பற்றி நிவாரண நிதியை பெற்றுக்கொள்ளலாம். என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**